**அ.வ.எண்.286/2024**
**பி.வா.சா.1 : நாகராஜன்**
**தேதி : 27.01.2026**

**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**

**<u>4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

இல்லை.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தாந்தோன்றிமலையல் 13 வருடங்களாக வசித்து வருகிறேன். நீங்களும், தாமரை, சரஸ்வதி, ஈஸ்வரி ஆகியோர்கள் எஸ்டேட்டில் வேலை செய்தவர்கள் என்று சொன்னால் சரிதான் தனித்தனியாக வேலை செய்தோம். முதலில் ஈஸ்வரிக்கு திருமணம் நடந்தது பின்னிட்டு சரஸ்வதிக்கு திருமணம் நடந்தது. 1ம் வாதி தாமரைக்கு நான் தான் திருமணம் செய்து வைத்தேன். வாதிகளான தாமரை, சரஸ்வதி, ஈஸ்வரி ஆகியோருக்கு உங்கள் பூர்வீக சொத்தில் பங்கு கொடுக்க உங்களுக்கு ஆட்சேபனையில்லை என்றால் என் தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்களுக்கு வாதிகளுக்கும் எனக்கும் உரிமை உள்ளது ஆகையால் அவற்றில் பாகம் கொடுக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என் பெயரில் உள்ள சொத்துக்களை பிரித்து கொடுக்க எனக்கு ஆட்சேபனை உள்ளது. வழக்குச்சொத்துக்களில் உள்ள சி அட்டவணை சொத்து பூர்வீக சொத்து என்று சொன்னால் சரியல்ல. தாவா சி அட்டவணை சொத்து உங்கள் சொத்து என்பதை நீருபிப்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.8 ஆவணத்தில் 4ம் பிரதிவாதிக்கு நீங்கள் கிரையம் செய்து கொடுத்துள்ள சொத்து எங்களுக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் பூர்வீக சொத்து என்று கூறியுள்ளது 4ம் பிரதிவாதிக்கு நான் எழுதிக்கொடுத்துள்ள கிரைய ஆவணம் தான் இது. தாவா சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்து

என்பதால் வாதிகளுக்கும் சொத்தில் பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. உங்கள்து தம்பிக்கு மனவளர்ச்சி குன்றியிருப்பதாலும், வாதிகள் திருமணமாகி வெளியூரில் இருப்பதாலும் ஆவணங்களை நீங்கள் உங்கள் பெயருக்கு மாற்றியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.27 19:23:36 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.